# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 06.03.2026 |
| Case No. | : **O.S.49/2025** | Nationality | : Indian |
| Name | : தினேஷ் | Religion | : |
| Father's/Husband's Name | : கலியமூர்த்தி | Age | : 40 |
| Village | : மகாராஜபுரம் | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

வா.சா.1

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் வழக்கின் 5ம் வாதி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 09.12.2021 தேதியிட்ட சௌந்தரவள்ளி அவர்களின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.01.2023 தேதியிட்ட கலியமூர்த்தி அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.02.2023 தேதியிட்ட நாங்கள் கொடுத்த மனுவிற்கான ஒப்புகை சீட்டு **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த பதில் கணினி தரவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சௌந்தரவள்ளி அவர்களின் இறப்பு சான்று நகல், எனது ஆதார் கார்டு நகல், கலியமூர்த்தி ஆதார் கார்டு நகல், 1, 2, 3, 4, மற்றும் 6ம் வாதிகளின் ஆதார் கார்டு நகல்களை தாக்கல் செய்கிறேன். பிராதுபடி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வாரிசு சான்று கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை கலியமூர்த்திக்கு வாரிசு சான்று கோரி தாக்கல் செய்துள்ளேன். கலியமூர்த்திக்கு 2 மனைவிகள். முதல் மனைவி சௌந்தரவள்ளி. 2வது மனைவி விஜயா. சௌந்தரவள்ளிக்கும் கலியமூர்த்திக்கும் ராஜ்மோகன், ராமகிருஷ்ணன், லலிதா, தினேஷ், மாலதி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். வேறு வாரிசுகள் யாரும் இல்லை. விஜயாவுக்கும் கலியமூர்த்திக்கும் மாலதி, தினேஷ் ஆகியோர் வாரிசுகள். முதல் மனைவி உயிருடன் இருக்கும் காலத்திலேயே இரண்டாவது மனைவி விஜயாவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கலியமூர்த்தியின் தாய் ராமஜெயம், தந்தை பொன்னுசாமி ஆகியோர் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார்கள். வழக்கில் சேர்த்துள்ள வாதிகளை தவிர வேறு வாரிசுகள் கலியமூர்த்திக்கு இல்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).